

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் முன்னாள் அமைச்சரும் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான முனைவர் க.பொன்முடி அவர்கள் தமது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (18.8.2026) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### பல்வேறு நாடுகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய

# உதவித் தொகையை வழங்காமல் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி ‘டிவிட்டர்’ பதிவு!

சென்னை, ஆக.20-

பல்வேறு நாடுகளில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய உதவித் தொகையை வழங்காமல் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு என்றும் இத் திட்டம் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது என்பதற்காக இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா என்றும் தமது டிவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி அவர்களின் டிவிட்டர் பதிவு வருமாறு:-

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், மலேசிய தேசியப் பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலுள்ள உயர்கல்வி நிலையங்களில் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகையை வழங்காமல், அவர்களின்



எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது த.வெ.க. அரசு.

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காக, இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா? உடனடியாக நிலுவையிலுள்ள உதவித் தொகையை விடுவித்து, மாணவர்களின் கல்வியைத் தடையின்றி தொடரச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. – முன்னாள் அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

# நெல்லையில் ஒண்டிவீரன் 255 வது நினைவு நாள்! திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் அறிக்கை!

நெல்லை. ஆக.21-

நெல்லையில் இன்று (20.08.2026 - வியாழக்கிழமை) விடுதலைப் போராட்ட வீரர், தியாகி ஒண்டிவீரன் அவர்களின் 255 வது நினைவு நாளை முன்னிட்டு பாளையங்கோட்டை மாவட்ட நீதிமன்றம் எதிரே அமைந்துள்ள நினைவு மண்டபத்தில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்கள் திருவுருவச் சிலைக்கு காலை 8 மணி அளவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், முன்னாள் அமைச்சர் டாக்டர். மதிவேந்தன் ஆகியோர் மாலை அணிவிக்கும் நிகழ்வில் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர். நெல்லை மேற்கு மாவட்டம் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்களது அறிக்கை வருமாறு:-

விடுதலைப் போராட்ட மாவீரர் ஒண்டிவீரன் அவர்களின் 255 வது நினைவு நாளை முன்னிட்டு இன்று (20 ஆம் தேதி) நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டை மாவட்ட நீதிமன்றம் எதிரே அமைந்துள்ள மணிமண்டபத்தில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிக்கும் நிகழ்வு நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், முன்னாள் அமைச்சர் டாக்டர்.மதிவேந்தன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

ஆகவே சிறப்புமிக்க இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த நெல்லை கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டறிக்கையில் கூறியுள்ளார்.

### நிதி ஒதுக்கி அரசாணை வெளியிட்டது கழக அரசு!

# நந்தன் கால்வாய் திட்டம் குறித்து அவதூறு கூறுவதா?

## சி.வி.சண்முகத்திற்கு விக்கிரவாண்டி முன்னாள் எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா கண்டனம்!

விழுப்புரம், ஆக.20-

“நந்தன் கால்வாய் திட்டம் குறித்து சட்டமன்றத்தில் உண்மைக்குப் புறம்பாக பேசுவதா?” சி.வி.சண்முகத் துக்கு விக்கிரவாண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அன்னியூர் சிவா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

நந்தன் கால்வாய் திட்டத்திற்கு அ.தி.மு.க. ஆடிசியில் தான் நிதி ஒதுக்கப்பட்டது என்று சட்டப்பேரவையில் சி.வி.சண்முகம் கூறியுள்ளார்.



இது உண்மை அல்ல, 2018-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் டிபிஆர் மற்றும் லெவலிங் பணிகளுக்காக ரூ.35 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டது.

ஆனால் கழக ஆட்சியில் நான் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தபொழுது முதல்வர் தளபதி அவர்களிடமும் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோரிடமும் வலியுறுத்தி ரூ.42.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் உபரி நீரை ஏரிகள் மற்றும் பாசன நிலங்களுக்கு திருப்புவதாகும். இதனால் விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் பெரும் பயனடைவார்கள்.

இத்திட்டத்திற்காக 29.1.2026 - அன்று அரசாணை வெளியிட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்படி உண்மை இருக்க இதனை மூடி மறைக்கும் வகையில் சி.வி.சண்மும் உண்மைக்கு மாறாக சட்டமன்றத்தில் பேசியுள்ளார். நிதி ஒதுக்கிவிட்டு பணிகள் நடைபெறவில்லை என்பது உண்மைக்கு மாறானது. அரசு உத்தரவுப்படி திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அன்னியூர் சிவா பேட்டியளித்தார்.

### குஜராத்தில் குப்பைகளை எரித்து மின்சாரம் தயாரிப்பது போல்

# தஞ்சை மாநகராட்சியிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## தஞ்சாவூர் மாநகராட்சிக் கூட்டத்தில்-சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வலியுறுத்தல்!

தஞ்சாவூர், ஆக.20-

தஞ்சாவூர் மாமன்ற கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் பேசுகையில்; மக்கள் பணியே மகேசன் பணி. நாம் அனைவரும் மக்களுக்காக பணியாற்ற வந்துள்ளோம். எம்.பி., எம்.எல்.ஏ., அமைச்சர் ஆகியோரால் கூட செய்ய முடியாத மக்கள் பணிகளை மக்களுடன் நெருங்கி இணைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மேற்கொண்டு சாதனை படைக்க முடியும். ஏனெனில் நானும் உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பு வகித்து பணியாற்றி உள்ளேன்.

ரூ.ஆயிரம் கோடி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் நிதி பெற்று உள்ள மாநகராட்சியே இப்படி இருக்கிறது என்றால் எந்த நிதி உதவியும் பெறாத மாநகராட்சி எப்படி இருக்கும் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். நான் இந்த கூட்டத்தை கவ



னித்த போது விந்தையாக உள்ளது. தீர்மானங்கள் அனைத்தும் ஒப்பந்த பணியாகவே உள்ளது. சென்ற கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகள், எழுப்பிய கேள்விகள் இந்த தீர்மானத்தில் கொண்டு வந்து அதற்காக காணப்பட்ட தீர்வு, நடவடிக்கை குறித்து குறிப்பிடப்பட வேண்டும். உறுப்பினர்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே தங்களது கோரிக்கையை மனுவாக அளித்தால் அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அதற்குரிய பதிலை விளக்கமாக அளிக்க ஏதுவாக இருக்கும். அதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

மாநகராட்சி வரவுகளையும் செலவுகளையும் உறுப்பினர்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். மாமன்ற உறுப்பினர்கள் பிறருக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். ஆலோசனை கூறுவது அதிகாரிகளின் பணி. ஆனால் அதை முடிவெடுத்து செயல்பாட்டுக்கு கொண்டு வருவது மாமன்ற உறுப்பினர்கள். மாமன்ற உறுப்பினர்கள் அனுமதித்தால் மட்டுமே எந்த பணியும் நடக்கும். அவ் வாறு இருக்கையில் மாமன்ற உறுப்பினர்கள் மாமன்றத்தில் ஒரு பொருள் வைக்கும் போது அதை குறித்து முழுமையான புரிதல் இருக்க வேண்டும்.

அப்போது தான் அதை அனுமதிப்பதா, இல்லையா என்பதை முடிவு செய்ய முடியும், குஜராத்தில் கிராம ஊராட்சியில் குப்பைகளை எரித்து மின்சாரம் தயாரித்து அதை அரசுக்கு விற்பனை செய்கிறார்கள். அது போல் நமது மாநகராட்சியிலும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

இவ்வாறு தஞ்சை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. உரையாற்றினார்.

### நாளுக்கு நாள் தமிழ்நாட்டில்

# சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது!

# மக்கள் பாதுகாப்பில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள்!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!




சென்னை,ஆக.19–

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே, ஆட்கள் நடமாட்டம் உள்ள பெட்ரோல் பங்க்கில், மூன்று பேர் கொண்ட கும்பல் கத்தி முனையில் ஊழியரை மிரட்டிப் பணத்தைப் பறித்துச் செல்லும் அதிர்ச்சி வீடியோ வெளியாகியுள்ளது! இதுவே இந்த டம்மி தவெக அரசின் சட்டம் ஒழுங்கின் லட்சணம்!

உழைக்கும் மக்கள் தங்கள் வியர்வை சிந்தச் சம்பாதித்த பணத்தைப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு போய் சேர்ப்பதே பெரிய போராட்டமாக மாறிவிட்டது. இதுதான் இந்த அரசின் ‘வெற்றி’ ஆட்சியா?

சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றத் துப்பில்லாத அரசு, சட்டசபையில் தனக்குத்தானே புகழ்பாடிப் பூரித்துப் போவது என்ன மாதிரியான நியாயம்? காவல்துறையைத் தன்வசம் வைத்துள்ள முதல்வர், குற்றங்களைக் கட்டுப்படுத்தாமல் தன் அமைச்சர்களையும், MLA–களையும் வைத்துப் புகழ் பாடி புளகாங்கிதம் அடைகிறார்.

மக்கள் தினமும் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்கிறார்கள், முதல்வர் அவர்களே! வெட்டி விளம்பரப் பிரசாரங்களை நிறுத்திவிட்டு, மக்கள் பாதுகாப்பில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள்!

இவ்வாறு தி.மு.க ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

# கர்நாடக மாநில நிர்வாகத்தில் தமிழ்நாடு தலையிடக்கூடாது!

## 3 தமிழர்கள் கொலை விவகாரத்தில் – முதல்வர் டி.கே.சிவகுமார் ஆணவ பதில்!

பெங்களூரு, ஆக.20–

“எந்த மாநிலமும் மற்ற மாநிலத்தின் நிர்வாக விஷயத்தில் தலையிடக் கூடாது, என்று கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே.சிவகுமாரிடம், கர்நாடக வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து தமிழக தலைவர்கள் வெளியிட்ட கருத்துகள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த முதல்வர் டி.கே. சிவகுமார், “ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தில் மற்றொரு மாநிலம் தலையிடக் கூடாது. ஓ. பன்னீர்செல்வம் அல்லது வேறு யாராக இருந்தாலும் இந்த அடிப்படைப் புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள சட்டம்–ஒழுங்கு விவகாரங்களில் என்னால் தலையிட முடியாது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கே உரிய பிரச்சினைகள் உள்ளன. நமது மாநிலத்தை எப்படிக் காப்பது என்பது நமக்குத் தெரியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் தங்கள் பணியைச் செய்யட்டும், நாம் நமது பணியைச் செய்வோம். அவர்களின் நிர்வாகத்தில் தலையிட நான் விரும்பவில்லை. நமது மாநிலத்தின் கண்ணியத்தைக் காக்க வேண்டியது அவசியம். அவர்கள் தங்கள் பணியைச் செய்ய வேண்டும்; நாம் நமது பணியைச் செய்ய வேண்டும். என்று தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகேயுள்ள காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15–ம் தேதி அதிகாலையில் மானை வேட்டையாடியதாக அந்தோணிசாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து, வனத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன.

கர்நாடக வனப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப்பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசு, கர்நாடக அரசிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்றும், இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப் பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நிலையில், இதற்கு பதில் அளிக்கும் விதமாக கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொல்கத்தாவில் தீ விபத்து!

கொல்கத்தா, ஆக. 20-

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஹோட்டலில் நேற்று அதிகாலை 1:45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து தீ விபத்து ஏற்பட்ட பகுதிக்கு ஐந்து தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு, காவல்துறையினரும் பேரிடர் மேலாண்மை துறையினரும் மீட்பு பணிகளை மேற்கொண்டனர்

இந்த விபத்து குறித்து பேசிய அமைச்சர் “நாங்கள் இறந்தவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்த முயற்சித்து வருகிறோம். விபத்து ஏற்பட்ட இந்த கட்டிடத்தின் நிலை மிக மோசமாக உள்ளது

தீ விபத்தில் நமது நாட்டை சேர்ந்தவர்களும் வங்கதேசத்தை சேர்ந்தவர்களும் உயிரிழுந்துள்ளனர்

இந்த கட்டிடத்திற்குள் பல ஹோட்டல்கள் உள்ளன. இங்கு என்ன நடக்கிறது என்பதை பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன். தீ விபத்திற்கான காரணம் மின்கசிவாக இருக்கலாம். ஆனால் தடயவியல் பரிசோதனை மூலம்தான் தீ விபத்துக்கான தெளிவான காரணம் தெரியவரும். கட்டிட நிர்வாகம் அடிப்படை பாதுகாப்பு மற்றும் கட்டுமான விதிமுறைகளை பின்பற்றவில்லை. ஹோட்டலின் செயல்பாட்டில் பல முறைகேடுகள் நடந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.

### சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் நிறைவேற்றிய ஒரே வாரத்தில்

# ஆளுநர் கலந்து கொண்ட பட்டமளிப்பு விழாவில் 3-ஆம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது!

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி கேள்வி!

**தமிழ்த்தாய் வாழ்த்தின் மரியாதையை பாதுகாப்பதில் தவெக அரசு ஒருபோதும் சமரசம் செய்யாதுஎன முதலமைச்சர் விஜய் தனித்தீர்மானம் நிறைவேற்றி பேசிய ஒரே வாரத்தில் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில், ஆளுநர் கலந்துகொண்ட பட்டமளிப்பு விழாவில் 3ம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது!**

**#Wingகுரல்**

